ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2180/23 - 2020 ජූනි මස 17 වැනි බදාදා - 2020.06.17

2180/23 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 3/2/3/10/2018

மே/கம்/பிடியேகெதர ஆரம்பப் பாடசாலைக்கு தேவையான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 324/A முடுகமுவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்துக்காக கம்பஹா நில அளவை அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 4194 இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விபரத்தைக் கொண்ட காணி.

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: அபகஹலந்த; விபரம்: வீட்டுத் தோட்டம், 10 ஆண்டுகள் பழமையான 16 தென்னை மரங்கள், 20 ஆண்டுகள் பழமையான 13 பலா மரங்கள், 20 ஆண்டுகள் பழமையான 5 மஹோகனி மரங்கள் மேலும் 20 வயதுடைய 6 தேக்கு மரங்கள்; உரிமை கோருபவர்: ஜயகொடி ஆரச்சிகே தயாவதி; விஸ்தீரணம்: 0.2942 ஹெக்டயார்.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அத்தனகல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். பீ. குணவர்தன,
பிரதேச செயலாளர்,
அத்தனகல்லை.

பிரதேச செயலகம்,
அத்தனகல்லை,
2020, யூன் 03.

07 - 87